1980 பிப்ரவரி 2]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:

(அ) சென்னை மாநிலக் கல்லூரியில் கீழ்க்கண்ட உபகரணங்கள் உள்ளன.—

(1) கடைசல் இயந்திரம் (Lathe Machines) 3

(2) சிறிய மேசை கடைசல் இயந்திரம் (Small Table Lathe). 1

(3) உலோகத் தகட்டில் துளைகள் இடுவதற்கான இயந்திரம் (Milling Machine). 1

(4) உலோகத்தில் (பெரிய அளவு) துளையிடும் இயந்திரம் (Drill Large size). 2

(5) உலோகத்தில் (சிறிய அளவு) துளையிடும் இயந்திரம் (Drill Small size). 1

(6) மின் உலோக ரம்பம் (Power Hacksaw). 1

(7) மரம் அறுக்கும் இயந்திரம் (Wood Cutting Machine). 1

(8) மரம் அளவு கணக்கிடும் இயந்திரம் (Wood Planning Machine). 1

(9) அறவைக் கல் (Grinding Stone) 1

(ஆ) மேற்குறிப்பிட்டுள்ள உபகரணங்கள் அனைத்தும் ஒழுங்காகச் செயல்படுகின்றன.

(இ) தொழிற் பட்டறையை மாணவர்கள் பயன்படுத்துவது இல்லை.

திருவில்லிபுத்தூர் நகரில் அரசு அலுவலர்களுக்கு வீடுகள்.

வினா எண் 13— திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருவில்லிபுத்தூர் நகரில் அரசு அலுவலர்களுக்கு வீட்டு வசதி வாரியத்தில் இருந்து வீடுகட்டிக்கொடுக்கும் திட்டம் அரசு செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த திருவில்லிப்புத்தூரில் 75% அரசு அலுவலகங்கள் இருக்கின்றன. அங்கே பணிபுரிகின்ற அரசு அலுவலர்கள் காலையில் 9 மணிக்கே அட்வான்சாக வந்து இரவு 9.00 மணி வரையிலும் பணி புரிகின்றார்கள். அப்படிப் பட்ட அரசு அலுவலர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்காமல், வேலையில்லாமல் பொழுது போக்கிக் கொண்டு இருக்கின்ற சென்னை மாநகரத்தில் இருக்கின்ற அரசு அலுவலர்களுக்கு வீடு கட்டிக் கொடுத்திருக்கிறீர்கள். எனவே, திருவில்லிபுத்தூர் தாலூக்காவில் உள்ள அரசு அலுவலர்களுக்கு எப்போது வீடு கட்டிக்கொடுக்கப் போகிறீர்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இருக்கின்ற அரசின் கொள்கைப் படி, தமிழ்நாடு அரசு வாடகை—வீட்டு வசதித் திட்டத்தை மாவட்ட கோட்டத் தலைநகரங்களில்தான் தற்போது செயல்படுத்தி வருகிறது. திருவில்லிபுத்தூர் வட்ட தலைமை நகரம் என்பதால் இத் திட்டத்தை மேற்கொள்ளவில்லை.

காஞ்சீபுரத்தில் பாதாளச் சாக்கடை அமைப்புத் திட்டம்.

வினா எண் 14—திரு. எஸ். ஜே. இராமசாமி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) காஞ்சிபுரத்தில் பாதாளச் சாக்கடை அமைக்கத் திட்டம் எந்த ஆண்டு போடப்பட்டது?

(ஆ) அதற்கு மதிப்பீடு எவ்வளவு?

(இ) திட்டமிட்டவாறு முடிவு பெறாததன் காரணம் என்ன?

(ஈ) எப்போது முடிவு பெறும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்;

(அ) காஞ்சீபுரம் பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கு 1970-ம் ஆண்டு அரசு நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டது.

(ஆ) ரூ. 105.44 இலட்சங்களாகும்.

(இ) கழிவுநீரேற்று நிலையம் மற்றும் சுத்திகரிப்புக்கான இடங்கள் கிடைக்காத காரணத்தாலும், நில ஆர்ஜிதப் பணிகள் தாமதமான காரணத்தாலும், மேலும் இத்திட்டத்திற்கு தேவையான பெரிய விட்டமுள்ள பீங்கான் குழாய்கள் பெறுவதில் தாமதமான காரணத்தாலும் இத்திட்டம் தாமதமாக செயல்பட ஏதுவாகியது.

(ஈ) மார்ச்சு 1980-ம் ஆண்டுக்குள் முடிவுறும்.